# இன்றைய இறைவார்த்தை

# 25-02-2015

## தவக்காலம் முதல் வாரம் – புதன்

**முதல் வாசகம்:**

நினிவே மக்கள் தங்கள் தீய வழிகளை விட்டு விலகினார்கள்.

**இறைவாக்கினர் யோனா நூலிலிருந்து வாசகம். 3 : 1 – 10**

இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர், “நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியை அங்குள்ளோருக்கு அறிவி” என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக் கடக்க மூன்று நாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்த பின், உரத்த குரலில், “இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்” என்று அறிவித்தார். நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக்கொண்டனர். இந்தச் செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்கார்ந்தான். மேலும் அவன் ஓர் ஆணை பிறப்பித்து, அதை நினிவே முழுதும் பறைசாற்றச் செய்தான். “இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது: எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக்கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது. மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக்கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும் தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும். இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக்கொள்வார் அவரது கடுஞ்சினமும் தணியும் நமக்கு அழிவு வராது.” கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார். தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை.

இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
இறைவா! உமக்கு நன்றி.

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 51: 1-2. 10-11. 16-17 (பல்லவி: 17)**

**பல்லவி: நொறுங்கிய உள்ளத்தை இறைவா, நீர் அவமதிப்பதில்லை.**

1. கடவுளே! உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும். உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப என் குற்றங்களைத் துடைத்தருளும். என் தீவினை முற்றிலும் நீங்கும்படி என்னைக் கழுவியருளும். என் பாவம் அற்றுப்போகும்படி என்னைத் தூய்மைப்படுத்தியருளும். பல்லவி
2. கடவுளே! தூயதோர் உள்ளத்தை என்னுள்ளே படைத்தருளும். உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை, என்னுள்ளே உருவாக்கியருளும். உமது முன்னிலையிலிருந்து என்னைத் தள்ளி விடாதேயும். உமது தூய ஆவியை என்னிடமிருந்து எடுத்துவிடாதேயும். பல்லவி
3. ஏனெனில், பலியினால் உம்மை மகிழ்விக்க முடியாது. நான் எரிபலி செலுத்தினாலும் நீர் அதில் நாட்டங்கொள்வதில்லை. கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே! நொறுங்கிய, குற்றமுணர்ந்த உள்ளத்தை நீர் அவமதிப்பதில்லை. பல்லவி

**நற்செய்திக்கு முன் வசனம்:** யோவேல் **2 : 12 – 13**

இப்பொழுதாவது உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள். ஏனெனில் நாம் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர், என்கிறார் ஆண்டவர்.

**நற்செய்தி வாசகம்:**

இத்தீய தலைமுறையினர்க்கு யோனாவின் அடையாளத்தைத்
தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**தூய லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11 : 29 – 32**

அக்காலத்தில் மக்கள் வந்து கூடக் கூட இயேசு கூறியது: “இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய்

இருந்ததைப் போன்று மானிடமகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!”

இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
கிறிஸ்துவே உமக்குப் புகழ்.

**சிந்தனை:**

அடையாளமா வேண்டும் உங்களுக்கு? இன்றே ஜப்பானுக்கு உடனே ஒரு பயணம் செல்லுங்கள். மனித அறிவு தவிடு பொடியாகிக் கிடக்கிறது. பணம் தன் இயலாமைமையை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறது. ஆணவமும் அகங்காரமும் முகவரி இழந்து கிடக்கிறது, ஆடம்பரமும், சுக போக வாழ்க்கையும் சுடுகாடாக ஒரே மணி நேரத்தில் மாறியிருக்கிறது. இயற்கையை கசக்கிப் பிழிந்து சுயநல சுகம் கண்ட காரணத்தால் இன்று இயற்கை மறுப்பு தெறிவித்துள்ளது.

அப்பாவிகள் தங்கள் உயிரை இழந்து, இரத்தம் சிந்தி, உடைமைகளைச் சிதரடித்து, ஏன் தான் எங்களை விட்டு வைத்தாயோ? ஏன் எங்களை ஓலமிட வைத்தாய்? அணு உலைகளை உடைத்து எங்களை ஏன் இன்னும் உயிரோடு சித்திரவதை செய்கிறாய்? எனக் கதறுவது உங்கள் காதுகளில் விழும். கடலுக்குள் கார். வீதியில் கப்பல். வீட்டுக்கு மேல் படகு. என்ன வினோதம்? விபரீதம். இவ்வளவு நடந்தும் எத்தனையோ மனிதர்கள் இன்னும் அடையாளம் கேட்கின்றனர். இன்று அந்நிகழ்வு எங்கோ யாருக்கோ நடந்தது போலவும், எதுவுமே நடக்காதது போலவும் மனிதன் வாழத் தொடங்கிவிட்டான். அடுத்து வேறொரு அடையாளம் காணக் காத்திருக்கின்றான். நீயும் அப்படி ஓர் அடையாளத்திற்காகக் காத்திருக்கின்றாயா? அல்லது மனந்திருந்தி, நற்செய்தியை நம்பி, உன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு இயேசுவை நோக்கிச் செல்லவிருக்கின்றாயா? சிந்திப்போம்.

**********